MAY 2022 **P/ID 35320/PTL2K**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. பெரியாரின் பிறப்பு குறித்து எழுதுக.

2. பெரியார் - நாகம்மையைத் திருமணம் செய்யக் காரணம் என்ன?

3. பெரியார் தன்னை இறை மறுப்பாளராக மாற்றிக் கொண்டதற்கான காரணத்தைக் கூறுக.

4. பெரியாரின் காசிப் பயணம் குறித்து எழுதுக.

5. பெரியார் - இராஜாஜி நட்பினைச் சுட்டுக.

6. காங்கிரஸ் கட்சியில் இருந்து பெரியார் வெளியேறக் காரணமென்ன?

7. வைக்கம் போராட்டம் குறித்து எழுதுக.

8. குருகுலப் போராட்டம் - குறிப்பு வரைக.

9. பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள் குறித்து எழுதுக.

10. சுயமரியாதை இயக்கத்தின் தோற்றுவாயினை விளம்புக.

11. பெரியாரின் தமிழ்மொழிப் பற்றினைக் குறிப்பிடுக.

12. பெரியார் வெளியிட்ட இதழ்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. பெரியாரின் இளமைக்கால புரட்சிகரச் செயல்களை விளக்குக.

14. கள்ளுக்கடை மறியல் போராட்டத்தை எடுத்துரைக்க.

15. காந்தியாருடைய கொள்கை மீது பெரியார் பற்றுக்கொள்ளக் காரணம் என்ன? விளக்கம் தருக.

16. சுயமரியாதை இயக்கத்தின் தலையாய கொள்கைகளை எடுத்தியம்புக.

17. பெண் விடுதலை குறித்த பெரியாரின் நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்துக.

18. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து விளக்குக.

19. பெரியாரின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் குறித்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே
500 சொற்களில் விடையெழுதுக.

20. பெரியாரின் போராட்ட குணங்களைச் சான்றுகாட்டி நிறுவுக.

21. இந்திய தேசிய காங்கிரஸில் ஈ.வெ.ரா.வின் பங்கு பணியினைக் கட்டுரைக்க.

22. "பெரியார் ஒரு சமூக விஞ்ஞானி" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

23. பெரியாரின் இதழியல் பணிகள் குறித்து விவரி.

24. விதவை மறுமணம் குறித்த பெரியாரின் பார்வையை ஆராய்க.

———————